Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 30 14-07-94 வியாழக்கிழமை ஓசை 146

## பாம்புக்கடி சிகிச்சைக்கு புதிய மருந்து உற்பத்திசெய்ய முயற்சி

இலங்கையில் பாம்பினால் கடியுண்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான ஊசி மருந்தை உற்பத்தி செய்ய உதவி அளிப்பதற்கு பிரிட்டனிலுள்ள மருந்து வகைகள் உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது, இப்புதிய ஊசி மருந்து எதிர்வரும் செப்டம்பரில், பாம்பினால் கடியுன்ட நோயாளர்களுக்கு பரீட்சித்துப் பார்த்து அதன் முடிவுகளைத்தொடர்ந்தே ுகாதார அமைச்சு இந்த ஊசிமருந்தை உபயோகிப்பதற்கான அனுமதியை வழங்கும். இலங்கையில் வருடந்தோறும்சுமார் 20,000 பேர் பாம்பினால் கடியுண்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்றனர். இவர்களில் சுமார் 800 பேர் இறந்து விடுகின்றனர். இப்புதிய ஊசி மருந்தின் மூலம் கூடுதலானோரின் (6 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வன்முறை மேலும் அதிகரிப்பு

# 48மணிநேரத்தில்93சம்பவங்கள்

# கட்சிகள் பரஸ்பர குற்றச்சாட்டு

### 50க்குமேற்பட்டவாகனங்கள் சேதம்

சிறிலங்காவில் தேர்தல் வன்முறைகள் நாளுக்குநாள் அதிகரித்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. நேற்று மாலையுடன் முடிவடைந்த 48 மணி நேரத்தில் மட்டும் 93 தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றதாகவும இதில் இரு தரப்பிலுமாக நூற்றுக்கணக்கானோர் படுகாயம் அடைந்ததோடு, ஐம்பதிற்கும் மேற்பட்ட வாகனங்களும சேதமாக்கப்பட்டுள்ளன. இதேசமயம், தேர்தல் வன்முறை குறித்து இருதரப்பினரும் பரஸ்பரம் குற்றம் சாட்டியும் வருகின்றனர்.

வேட்புமனு தாக்கல் செய்ததின் பின்னர் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு இரு கட்சிகளும் பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டியுள்ளதாக பிரான்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் செய்தி நிறுவனத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா தேர்தல் வன்முறைக்கு முழுமையான காரணம் பொது ஜன ஐக்கிய முன்னணியே என்று குற்றம் சாட்டியுள்ளதாகவும் அச் செய்தி நிறுவனம் சுட்டிக் காட்டியது.

இதேவேளை பொது ஜன ஐக்கிய முன்னணி ஐ.தே.க. சிரேஷ்ட அமைச்சர்களின் தலைமையில் தாக்குதல் நடைபெறுவதாக சுட்டிக்காட்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இவற்றை யார் யார் செய்தார்கள் என்பதைவிட தேர்தல் வன்முறை நடைபெற்றுக் கொண்டிருப்பது (6ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் தலைமையில் ...

## பூநகரிப் படைமுகாம் மீது புலிகள் 90 நிமிட தாக்குதல்

### சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

பூநகரி சிறிலங்கா இராணுவ முகாம் மீது சென்ற திங்கட்கிழமை விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் 'லங்காதீப' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளன.

பூநகரி இராணுவ முகாமின் மேற்குப் பகுதியில் மேற்படி தாக்குதல் நடைபெற்றதாகவும் சுமார் 90 நிமிடங்கள் இத் தாக்குதல் நீடித்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் அப் பத்திரிகைக்கு மேலும் தெரிவித்துள்ளன.

## ராணுவம், தேசவிரோதிகள் பாலியல் வன்முறை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பாவற்கொடிச் சேனை கிராமத்தை சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ தேசவிரோதிகளும் பெண் ஒருவரை பாலியல் வன்முறைக் குட்படுத்தியுள்ளனர்.

கடந்த ஐந்சாம் திகதி இடம்பெற்ற இச் சப்பவத்தில் அருமைத்துரை சுபாஜினி என்ற பெண்ணே இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமுக்கு கொண்டு செல்லும்போது சிறிலங்கா இராணுவத்தினராலும் ரெலோ தேசவிரோதிகளினாலும் பாலியல் வன்முறைக் குட்படுத்தப்பட்டார். தற்போது இவர் மட்டக்களப்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## பூவரசங்குள மோதலில் அதிகாரியும் சிப்பாயும் பலி

வவுனியா மாவட்டம் பூவரசங்குளம் இராணுவ முகாம் முன்பாக நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையே மோதலொன்று இடம் பெற்றதாக நடவடிக்கை தலைமையகம் கொழும்பில் அறிவித்துள்ளது.

இம் மோதலில் சிறிலங்கா பாதுகாப்புப் படையைச் சேர்ந்த அதிகாரி ஒருவரும், இராணுவச் சிப்பாய் ஒருவரும் கொல்லப்பட்டதாக அது மேலும் அறிவித்தது.

## வன்னி மாவட்டத்தில் இருபோராளிகள் வீரச்சாவு

நேற்று முன்தினம் வன்னி மாவட்டம் பிரமநாதன்குளம என்ற இடத்தில் சிறிலங்கா ... போராளிகள் வீரச்சாவைத தழுவிக் கொண்டனர். இம ...

## பல்கலைக்கழக ஊழியர் இன்று வேலை நிறுத்தம்

தொழில் நுட்பவியலாளர் நியமனம் தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகம் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் இன்று வேலை நிறுத்தப் போராட்டத்திலும் மறியற் போராட்டத்திலும் ஈடுபடவுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்கு கண்டனம் தெரிவித்து இவ் ஊழியர்கள் கடந்தமாதம் 10ம் திகதி அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தமை தெரிந்ததே.

எவ்வித பேச்சுவார்த்தைக்கும் எம்மை அழைக்காத பல்கலைக்கழக நிர்வாகம் தனது (6ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங். வேட்பாளர் மீது மட்டுநகரில் தாக்குதல்

(கொழும்பு)

மட்டக்களப்புச் செயலகத்தில் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்து விட்டு வெளியேறிய முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் ஒருவர் மீது ... துள்ளன. மட்டக்களப்பு நகரிற்கு அவர் ஊர்வலமாகச் சென்ற போதே இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இத்தாக்குதலில் எவரும் காயமடையவில்லை என்றும் ...

மாவட்டம் பிரமநாதன் குளம என்ற இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலொன்றில இரு விடுதலைப் புலிகள் தழுவிக் கொண்டனர். இம மோதலில் இராணுவத்தின ருக்கு கேற்பட்ட சேத விபரம தெரியவரவில்லை

(6ஆம் பக்கம் பார்க்க)



மேஜர் வாசன்
(மன்னன்)



2ஆம்லெப். பூபாலன்

# அமைச்சர் தலைமையில் குண்டர் குழு சு.கமுன்னாள்எம்.பிவீட்டைதாக்கியது!

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வீடு நேற்று மாலை ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர் தலைமையில் சென்ற குண்டர்களினால் தாக்கப்பட்டு பாரிய சேதங்களுக்கு உள்ளாகியிருப்பதாக தெரிய வருகின்றது.

முன்னாள் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினரான விஜேமுனி டி சொய்சா என்பவரின வீட்டிற்கு ஏழு வாகனங்களில் வந்த குண்டர்கள இவ்வாறு தாக்குதல் நடத்தியதாகவும் அப்போது பொலிசார் மேற்படி சம்பவத்தைப் பார்த்து ரசித்தபடி இருந்ததாகவும் தெரியவருகின்றது.

கைத்தொழில் விவசாய அமைச்சர் தர்மசிறி பண்டார மற்றும் முன்னாள் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்திம பண்டார ஆகியோர் இவ் வாகனங்களில் வந்ததாகவும் இவர்களின் கட்டளைக்கு அமையவே பொலிசார் நடவடிக்கைஎதனையும் மேற்கொள்ளவில்லைஎனவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

## பொலிசார் துப்பாக்கிச் சூடு; ஐந்து பேர் காயமடைந்தனர்

(கொழும்பு)

தேர்தல் வேட்பாளர் மனு தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து முடிவடைந்த நாற்பத்தியெட்டு மணித்தியாலத்தில் தொண்ணூற்று மூன்று தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றிருப்பதாக பொலிஸ் தலைமை அலுவலகப் பேச்சாளர் தெரிவித்துளார்.

மேற்படி சம்பவங்கள் இரு பிரதான கட்சிகளுக்கும் தொடர்பானது என்றும் இது தொடர்பாக பதினைந்து வேட்பாளர் ஒருவர் மீது இனம் தெரியாத குழுவொன்று தாக்குதல் நடத்தியுள்ளதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித் ... காயமடையவில்லை என்றும் ஆனால் பொலிசார் நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக மேல் நோக்கி துப்பாக்

(6ஆம் பக்கம் பார்க்க)

(6ஆம்பக்கம் பார்க்க)

பொது ஜன ஐக்கிய முன்னணியின்

## கண்டி வேட்பாளர்மனுவை தள்ளுபடி செய்ய சதி

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணியின் கண்டி மாவட்ட வேட்பாளர் மனுவை தள்ளுபடி செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தன்னால் ஆன முழுமையான முயற்சி எடுத்ததாகவும் ஆனால் கட்சி முன்னேற்பாடாக நடந்துகொண்டதைத் தொடர்ந்து ஐ.தே.கவின் சதி முறியடிக்கப்பட்டதாகவும் பொது ஜன ஐக்கிய முன்னணிப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் வேட்பாளர் மனு தாக்கல் செய்யும் இறுதிநாளான திங்கட்கிழமை செயற்படுத்தும் வகையில் இதற்காக ஒரு சதித்திட்டத்தை ஐ.தே.க. வகுத்ததாகவும் இது தமது அணியில் இருந்து பிரிந்து சென்ற சிலரின் உதவியுடன் மேற்கொள்ளப் பட்டதாகவும் ஆனால் தமது கட்சியின் முன்னேற்பாடுஇதனை முறியடித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அரசியல் தீர்வு காணமுடியாவிட்டால் இராணுவத் தீர்வு காணப்படும்

## ஐ. தே. க. தேர்தல் விஞ்ஞாபனம்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு முடியுமெனின் அரசியல் ரீதியாக தீர்வு காண்பது இல்லையேல் இராணுவத் தீர்வு காண்பது என்று ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருப்பதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

அத்துடன் போரில் ஈடுபட்டு உயிரிழக்கும் அல்லது காயமடையும் அல்லது பதவி துறக்கும் அல்லது ஓய்வுபெறும் இராணுவத்தினருக்கு இரண்டு முதல் ஐந்து ஏக்கர் வரையிலான நிலம் இலவசமாக வழங்கப்படும் எனவும் வேலை இல்லாத இளைஞர்களுக்கு மாதாந்தம் 1,200 ரூபா உதவித் தொகை அளிக்கப்படும் எனவும், தாம் ஆட்சிக்கு வந்தால் ஜனாதிபதி ஆட்சி நீக்சப்பட்டு பிரதமர் தலைமையிலான பாராளுமன்ற ஆட்சிக்கு வழி ஏற்படுத்தப்படும் எனவும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈ.பி.ஆர்.எல்.எவ்.குழுவினர் தீவுப்பகுதியில் பிரசாரம்

யாழ். மாவட்டத்தில் தீவுப்பகுதி நிலைமைகளை நேரில் கண்டறியவும், தேர்தல் பிரசார நடவடிக்கை பற்றி ஆராயவும் ஈ. பி. ஆர். எல். எவ். தனது பிரதிநிதிகளை கப்பல் மூலம் காரை நகருக்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

தலைமை வேட்பாளர் சர்வேஸ்வரன் தலைமையில் இவர்கள் திருகோணமலையிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில், வாக்காளரைச் சந்திப்பதும்இவர்களின் நோக்கம் என ஈ. பி.ஆர்.எல்.எவ். பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

## துணைப்படைவீரர் வீரச்சாவு

கடந்த 10-ந் திகதி மாலை 5 மணியளவில் மட்டக்களப்பு சிப்பிமடுவில் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகள் போராளிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் துணைப் படைவீரர் ஒருவர் காயமுற்று பின்னர் சயனைட் உட்கொ

(6ஆம் பக்கம் பார்க்க)

## கலந்துரையாடல்

பருத்தித்துறை, புலோலி பிரதேசத்தின் வர்த்தகர்களுடனான கலந்துரையாடல் நிகழ்வொன்று நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் பருத்தித்துறை, புலோலி பிரதேசத்திலுள்ள சகல வர்த்தகர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# இலக்கிய படைப்பாளிகள் கூட்டம்மீது பொலிஸ் அதிகாரிதலைமையில் தாக்கு

## 50க்கு மேற்பட்டோர் காயம்

(கொழும்பு)

சுதந்திர கலை இலக்கிய அமைப்பொன்றை நிறுவுவதற்கு நேற்று முன்தினம் கூடிய கலை இலக்கிய படைப்பாளிகள்மீது ஐ.தே க. உறுப்பினரான பொலிஸ் அதிகாரி உள்ளடங்கிய குழுவொன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

கொள்ளுப்பிட்டியில் நடைபெற்ற மேற்படி தாக்குதலின் போது ஐம்பதிற்கு மேற்பட்டவர்கள்காயமடைந்துள்ளனர். தாக்குதல் நடத்திய குழுவினர்களை படைப்பாளிகள் சுற்றிவளைத்ததாகவும் இதில் இருவரை பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிடிபட்ட இருவரையும் படைப்பாளிகள் பத்திரிகையாளர் முன் நிறுத்தியதாகவும் இதில் ஒருவர் விஷேட பொலிஸ் படை அணியின் அதிகாரியென்றும் இவர் ஐ. தே. க. அங்கத்தவர் என்றும் தெரியவந்துள்ளது.

இவர்கள் தாம் ஐ. தே. க. சிரேஷ்ட உறுப்பினரின் வேண்டுகோளுக்கு அமையவே இந் நடவடிக்கையை

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க குண்டர்கள் தாக்கி சு. க ஆதரவாளர் மரணம்

(கொழும்பு)

பெல்மதுள்ள பகுதியில் நடைபெற்ற கட்சி மோதலில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் மரணம் அடைந்துள்ளார் என முன்னாள் சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சுனேத்திர் வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

பெல்மதுள்ளயை சேர்ந்த பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளரான ஜே. எம். அமரசிங்கா (வயது24) என்பவரே மரணம் அடைந்

(6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## சீவாளி

சீவாளி (நாதஸ்வர நறுக்கு) விற்பனைக்குண்டு. கமலேஸ்வரி களஞ்சியம் 119|2, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (8787·)

## வெற்றுச் சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் 1272 வெற்றுச்சாக்குகள் (2ம்தரம்) விற்பனைக்கு உண்டு. கொள்வனவு செய்பவர்கள், அலுவலக நேரத்தில் பார்வையிட்டு தங்கள் முத்திரை பொறிக்கப்பட்ட கூறுவிலையைகீழ்க்காண்விலாசத்திற்கு 20.07.94ம் திகதி 3 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி-9916)

## பாய் நெசவுத் திட்டம்

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை மாவட்டம். வித்தியாபுரத்தில் பாய் நெசவுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றது

இத்திட்டத்தில் வறுமைக் கோட்டுக்குட்பட்ட 14 பெண்கள் பணிபுரிகின்றனர். இவர்களால் மாதாந்தம் 400 பாய்கள் உள்ளூரில் கிடைக்கும் பன் புல்லிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றன.

இங்கு பாய்கள் நல்ல தரமுள்ளதாக இருப்பதனால். இவற்றுக்கு மாவட்டத்திற்கு வெளியே விற்பனை வாய்ப்பை ஏற்படுத்தி. மாதாந்தம் 1300 பாய்களை உற்பத்தி செய்யக்கூடியதாகவிரிவாக்கம் செய்து மேலும் பல பெண்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க தற்பேது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## அலங்கார உற்சவம்

ஆனைக் கோட்டை காக்கைதீவு மயான வைரவர் 3 ஆம் நாள் அலங்கார உற்சவம் இன்று 14 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும்.

இவ்விழாவில் விசேட நாதஸ்வரக் கச்சேரி மகாபாரத விரிவுரை, வில்லிசை போன்றவை நடைபெறும்.

இம்மாதம் 20ஆம் திகதி ஆரம்பமாகும்

# கம்பன் விழாவின் போது செந்தமிழ் நாடாளுமன்று

அகில இலங்கை கம்பன் கழகத்தின் வருடாந்த கம்பன் விழா எதிர்வரும் 20ஆம் திகதிமுதல் 24ஆம் திகதிவரை நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்கு வீதியில் அமையும் விசேட பந்தலில் நடைபெறவுள்ளது.

விழாவில் இம்முறை அகலிகை எனும் கழகத்தின் நூல் வெளியிடப்படவுள்ளது. இலக்கிய நிகழ்வுகளாக வழமைபோல் பட்டிமண்டபம், கவியரங்கம், வழக்காடு மன்றம், ஆய்வரங்கு, ஐயம் தெளி அரங்கு, இசையமுது, இளைஞர் அரங்கு, சுழலும் சொற்போர் போன்றவையும் புதிய நிகழ்வுகளாக ஆடல் வேள்வி, செந்தமிழ்நாடாளுமன்றம் போன்றவையும் இடம் பெறுகிறது.

# மொழி பெயர்ப்பும் ஆங்கிலக் கல்வியும்

அரசியல், வரலாறு, இலக்கியம், விஞ்ஞானம். தொழில்நுட்பம் போன்ற கட்டுரைகள், ஆக்கங்கள் உரிய நேரத்தில் ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்து கொடுக்கவும் தனிப்பட்ட முறையில் 10-ம், 11-ம், 12-ம் ஆண்டுகளுக்கான ஆங்கிலமும் ஆங்கில இலக்கியமும் கற்பிப்பதற்கும்,

தொடர்பு கொள்ளவும்:-

**சி. முத்துக்குமாரன்**
பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி,
இணுவில் தெற்கு.

(8801)

# (பாண்) வெதுப்பி - 7/50
# 15.07.94 வெள்ளிக்கிழமை முதல்

மாவின் விலை அரசாங்கத்தால் கிலோவுக்கு ரூபா 1-50 சதம் குறைக்கப்பட்டிருப்பதனால் வெதுப்பியின் (பாணின்) விலை 50 சதத்தால் குறைக்கப்பட்டுள்ளதை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். ஆகவே வெதுப்பியின் (பாணின்) விலை நாளை 15-07-94 முதல் ரூபா 7-50 ஆக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

விலை, தரம், நிறை ஆகியவற்றின் குறைபாடுகளை எமக்கு அறியத்தரவும்.

183 ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

**ந. பாலவிநாயகர்**
மாவட்ட செயலாளர்
யாழ்.மா வெ. உ. சங்கம்.
(சி-9915)

# காணவில்லை



# பனிச்சங்கேணி தமிழர் மீளக் குடியேற மறுப்பு

(வாழைச்சேனை)

வாகரைப் பிரதேசத்தின் பனிச்சங்கேணி கிராமத்திலிருந்து சில மாதங்களுக்கு முன்னர் வெளியேறிய தமிழ்க் குடும்பங்கள் மீண்டும் தமது இடங்களில் குடியேறி வாழ்வதற்கு அச்சம் தெரிவித்துள்ளன.

பனிச்சங்கேணியில் மீண்டும் சென்று வாழ்வதற்கு பாதுகாப்பு உத்தரவாதம் கிடையாது. மேலும் அங்கு சென்று தொழில் செய்வதற்கும் வசதி இல்லாமலுள்ளது என மேற்படி அகதிகள் கூறியுள்ளனர்.

பனிச்சங்கேணி கிராமத்தைச் சேர்ந்த பல குடும்பங்கள் தற்போது வாழைச்சேனைப் பகுதியில் உள்ள பேத்தாழை, கல்குடா போன்ற கிராமங்களில் தங்கியுள்ளன

அண்மையில் இவர்களைச் சென்று பார்வையிட்ட செஞ்சிலுவைச்சங்ககுழுவிடம் இவர்கள் தெரிவித்ததாவது:-

''எமது கிராமம் ஒரு மீன்பிடிப் பகுதியாகும். அங்கு படையினரால் எமது வீடுகள் எரிக்கப்பட்டதுடன் தோணி, வலை என்பனவும் எரிக்கப்பட்டுள்ளன. அங்கு தொழில் செய்ய எந்தவித உபகரணமும் இல்லை. அத்துடன் எமது பகுதிக்கு ஒரு குறிப்பிட்டளவு பொருள்களே கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகிறது. அங்கு வாழ எந்த விதமான பாதுகாப்பு வசதிகளும் இல்லை''

அகதிகளுக்கு உதவிகள் செய்து தருவதுடன் இது பற்றி உயரதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதாகவும் செஞ்சிலுவைச் சங்கத்தினர் தெரிவித்தனராம்

## கண்காட்சியும் கலைவிழாவும்

(சுன்னாகம்)

தெல்லிப்பழை தொலைக் கல்வி நிலைய பயிற்சிஆசிரியர்கள் வழங்கும் ஆரம்பக்கல்விப் பிரிவுக் கண்காட்சியும் கலைவிழாவும் இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் சிரேஷ்ட போதனாசிரியர் திரு. பொ. சிறிஸ்கந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

## கலந்துரையாடல்

பாடசாலை சேவையில் ஈடுபடும் சிற்றூர்தி உரிமையாளர்களுக்கான ஒரு முக்கிய கலந்துரையாடல் எதிர்வரும் 16-ம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். பஸ் நிலைய காரியாலயத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட சிற்றூர்திகள்சேவை சங்க இணையம் அறிவித்துள்ளது

# நடன அரங்கேற்றம்



# நினைவுகூருகின்றோம்...
## 14.07.1994...

1979-ம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்கா காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு சித்திரவதையின் பின் சடலமாக வீசப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**இன்பம்** (விசுவஜோதி இரத்தினம் - நவாலி)

மற்றும் இவரது மைத்துனரான தமிழிளைஞன், இதே நடவடிக்கையின் பின் காணாமல் போன, நவாலி, நல்லூர், சாவகச்சேரிப் பகுதிகளைச் சேர்ந்த 04 தமிழிளைஞர்கள்.

1986-ம் ஆண்டு மட்டு-களுவாஞ்சிக்குடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

1988-ம் ஆண்டு முல்லைத்தீவு -கொக்காவில் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் விவசாயி.

1989-ம் ஆண்டு காரைநகர்-களபூமியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த,

**நாகேஸ்** (பஞ்சாட்சரம் நாகேந்திரராசா வேதரடைப்பு, காரைநகர் - யாழ்)

1990-ம் ஆண்டு கொக்காவில் சிறிலங்கா இராணுவமுகாம் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய,

**கோபி** (— அம்பாறை)

**லெப். மாவி** (பாலசிங்கம் பரமானந்தம்-மாவி வீதி யோகபுரம் முல்லைத்தீவு)

**லெப். சுமித்-சுமித்** (முத்துமாணிக்கம் சண்முகராசா-தென்னியங்குளம்- துணுக்காய்)

**லெப். நியூட்டன்** (பெ புஸ்பராஜா-கிளிநொச்சி)

**2-ம்லெப். மாலா** (சிறிமதி அருளம்பலம் - நெடியகாடு - வல்வெட்டித்துறை)

**2-ம்லெப். அஜந்தா** (சுசிலா தங்சரத்தினம்-சுசிலா வீதி, கல்வியங்காடு - யாழ்)

கொக்காவில் முகாம் தகர்ப்பின்போது தப்பியோடிய சிறிலங்கா இராணுவத்தினருடன் பாலம்போட்ட பாலத்தடியில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**ராஜு** (கறுப்பையா தியாகராசா-ஒட்டிசுட்டான்-முல்லைத்தீவு)

**பகீ-பகீர்** (கோவிந்தபிள்ளை சிவஞானம்-சில்வா வீதி-வட்டக்கச்சி)

யாழ்-மாவிட்டபுரத்தில் எதிர்பாராத வாகனவிபத்தில் எமைப் பிரிந்த,

**கப்டன் சாளி** (தேவநேசன் சாள்ஸ் ஜெகநேசன் - நவாலி தெற்கு -மானிப்பாய்)

மட்டு நகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டு, ரயர்போட்டு எரிக்கப்பட்ட 28 தமிழர்கள்.

திருமலை-நிலாவெளி இடம்பெயர்ந்த முகாமில் வைத்து சிறிலங்காப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 06 தமிழர்கள்.

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

1991-ம் ஆண்டு ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆகாய, கடல், வெளி நடவடிக்கையின் போது அப்பகுதி இராணுவத்தினருக்கு துணையாக வெற்றிலைக்கேணியில் தரையிறக்கப்பட்ட இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**விஸ்வலிங்கம்** (செல்வராஜா சிவராஜா - அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை - மட்டு)

**கண்ணன்** (தர்மன்பிள்ளை ஏகாம்பரம் - களுவாஞ்சிக்குடி - மட்டு)

**தவம் |தனம்** (அருளம்பலம் சௌந்தராஜன் - கூழாவடிக்குடியிருப்பு - மட்டு)

**ஜெகன்** (கந்தசாமி சரவணபவன்-3-ம் கட்டை, செல்வநாயகபுரம் - திருமலை)

**மேஜர் லவன்** (துரைசிங்கம் ராஜ்சங்கர் கொழும்பு

## கண்டெடுப்பு

யோகேஸ்வரிசிவகுருநாதன், தலசிங்கம் குலதேவசந்திரிகா, இந்திரலிங்கம் அனுஷா, மயிலுப்பிள்ளை சிவாஜினி, சிவகுருநாதன் புஷ்பலதா, குழந்தைவேல் சந்திரகுமார் ஆகியோரது அடையாள அட்டைகளும் எம். சிவாஜினி, கே. மங்கைடர்க்கரசி ஆகியோரது அலுவலக அடையாள அட்டைகளும் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

## ஆதாரம் காட்டி பெறவும்

பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைப்பொதி ஒன்று தாவடிப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம்காட்டி பெற்றுக் கொள்ளவும்.


ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா**

வழங்கும்

காவிச்செல்லும் உணவுப் பொட்டலங்கள் நண்பகல் 11.45 மணிமுதல் பிற்பகல் 3.45 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**விலை ரு 27/50**


**மரக்கறி, இறைச்சி, மீன்**

எதுவானாலும்

**ஜெசித்தாரா,**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி.

(சி/9920)

57/2 திருமகள் வீதி, அரியாலையைச் சேர்ந்த, தம்பு தவக்குமார் வயது 33 இவர் கடந்த 30-06 94 வியாழக்கிழமை காலையில், வேலைக்காக வீட்டிலிருந்து சென்றவர் இதுவரை திரும்பவில்லை சுமார் 5 அடி உயரமும் பொது நிறமும் உடைய இவர் இடதுபக்க உச்சி வகிர்ந்து தலைவாரியிருப்பார். இவர் கடைசியாகப் போகும் போது மண்நிறமான ஜீன்சும்வெள்ளை நிற சேட்டும் அணிந்திருந்தார். தயவு செய்து இவரைக் கண்டவர்கள் மேற்படி விலாசத்திற்கோ அல்லது யாழ். காவல்துறைக்கோ தகவலைத் தெரிவிக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

தகவல்

**த. விஜயலெட்சுமி**
(மனைவி)

(8788)


## பணி நிலை வெற்றிடங்கள்

கொடிகாமம் வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் தொடங்கவுள்ள வாணிப நிறுவனமொன்றிற்கு பின்வரும் பணிநிலைகளில் அமர்த்துவதற்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மருந்து விற்பனையாளர் (கொடிகாமம் ஆண்|பெண்)
2. கணக்குப் பதியுனர் (வல்வெட்டித்துறை -பெண்)
3. கணக்குப் பதியுனர் (கொடிகாமம் ஆண்|பெண்)

தகைமை: மேற்படி பணி நிலைகளில் பணிபுரிந்த முன் அனுபவம் வேண்டும்.

**அகவை: 18--40**

**விண்ணப்ப முடிவு நாள் 31-07-94**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி;

**விளம்பர இல - 339**
**மே/பா ஈழநாதம்**
மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: விண்ணப்ப மேலுறையின், இடது பக்கத்தில் விளம்பர இலக்கத்தைக் குறிப்பிடுக.

(8793)




கொக்குவில் கலாபவன மாணவனும்,
யாழ். க.ம.ம. வித்தியாலய மாணவனும்,
யாழ் பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவு,
மிருதங்க உதவி விரிவுரையாளர்,

**சி. மகேந்திரன்** அவர்களது மகனுமாகிய

## செல்வன் ம. தவேந்திரன்

அவர்களது நடன அரங்கேற்றம்
இன்று வியாழக்கிழமை மாலை 5-00 மணிக்கு
**இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில்**
யாழ். க.ம.ம. வித்தியாலய அதிபர் திரு. வீ. மாணிக்கம் அவர்களது தலைமையில் நடைபெறும்.

பெரியோர்கள், கலைஞர்கள் நண்பர்கள் அனைவரும் இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தந்து செல்வனை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

**திரு. திருமதி மகேந்திரன்**
பெற்றோர்

230, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(8810)


ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா வழங்கும்

திருவிழாக்கால, சுத்தபோசன உணவுப் பொட்டலங்கள், தயிர், மோர், அப்பளம் மற்றும் பக்தகோடிகள் விரும்பும் தித்திப்பான சுத்தபோசனஉணவுப் பொட்டலங்கள், வெள்ளி, செவ்வாய், மற்றும் விரத தினங்களில் விசேஷமாக தனியாக தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. விரையுங்கள்.

**ஜெசித்தாரா,**

[சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை சுண்டுக்குளி.]

(சி-9918)


- 06)

**லெப். கேணல் சூட்டி** (சின்னத்தம்பி இராசுசெல்வேந்திரன் - கெருடாவில், சாவகச்சேரி)

**கப்டன் சோலை** (சந்தியாப்பிள்ளை கிறிஸ்ரி கஜேந்திரன் 4-ம் குறுக்குத்தெரு - பருத்தித்துறை)

**லெப். யாதவன்** (கந்தையா கமலக்கண்ணன் - பாண்டியன்தாழ்வு - யாழ்)

**லெப். குணேஸ்** (செல்வராஜா பேரின்பமோகன் ஆதவன் -4-ம்வட்டரம், புங்குடுதீவு - யாழ்)

**லெப். சந்திரன்** (சங்கரப்பிள்ளை அன்பரசன் - நவாலி வடக்கு, மானிப்பாய் - யாழ்)

**லெப். மார்கிறட்** (சாந்தி சிற்றம்பலம்-ஊடத்துறை வடக்கு தாளையடி - யாழ்)

**2-ம்லெப். பழனி** (அந்தோனிப்பிள்ளைஅருள்தாஸ் - கடற்கரை வீதி - பருத்தித்துறை]

**றெஜி** [பொன்னனையா பத்மநாதன் - சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு - யாழ்]

**பாரத்** [இராசதுரை குகனதாஸ்-கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கு - யாழ்]

**சுரேஸ்** [சுப்பிரமணியம் சிவகுமார் - சித்தங்கேணி, வட்டுக்கோட்டை கிழக்கு - யாழ்)

நெல்லியடி - முடக்காட்டுப் பகுதியில் இரவு நேரம் தமது இல்லத்தில் உறங்கிக் கொண்டிருந்த போது பலாலிமுகாமிலிருந்து ஏவப்பட்ட ஏறிகணை தாக்குதலில் கொல்லப்பட்ட எழுத்தாளர், (நெல்லைக:பேரன்) அவரது மனைவி, மகள், மகன் ஆகிய 04 தமிழர்கள்-

1992ஆம் ஆண்டு ஆனையிறவு, கறுக்காய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின் போது வீரச்சாவெய்திய,

**கப்டன் சாதனன்-சாரணா-மாதா** (றப்பியஸ் அந்தோனிராசா - தொட்டியடி வீதி, விசுவமடு-முல்லைத்தீவு)

**கப்டன் தேனுகா-தேனுஜா** (மதனிகா சிவலிங்கம் வல்வை வீதி, உடுப்பிட்டி - தொண்டமானாறு)

இயக்கச்சிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய

**மேஜர் பாலா** (கிருஷ்ணன் தனபாலசிங்கம்- புத்தூர் கிழக்கு - யாழ்)

4-7-92 அன்று புல்லாவெளியில் இல. இராணுவத்துடனான சமரில் விழுப்புண்ணடைந்திருந்து வீரச்சாவெய்திய,

**2-ம்லெப். கீர்த்தி-கதிரவன்** [குணசேகரம் நகுலேஸ்வரன்- அரியாலை கிழக்கு-யாழ்]

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

[சி 9910] **தமிழீழ விடுதலைப்புலிகள்**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்

ஈழநாதம்



உலக வங்கியின் ஆலோசனைப்படி

# தொழில்நுட்ப பயிற்சிநெறி நிறுத்திவிட அரசு முயற்சி

(கொழும்பு)

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT) பயிற்சி நெறியை நிறுத்திவிட அரசு முயற்சி செய்து வருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலவச கல்வித் திட்டத்தின் கீழேயே இப் பயிற்சி நெறி நடந்து வருவதால் உலக வங்கியின் சட்டவையின்படி இலவசக் கல்வித் திட்டத்தை தடுக்கும் முயற்சிகளில் ஒன்றாகவே இப் பயிற்சி நெறியை நிறுத்திவிட அரசு முயன்று வருவதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இலவச பாடநெறியை இல்லாமல் செய்துவிட்டு அதே பாடநெறியை தனியார் நிறுவன மொன்றைக் கொண்டு நடாத்த அரசாங்கம் இணங்கியுள்ளதாகவும் இதுவரை முழுவதுமே இலவசமாகப் போதிக்கப்பட்ட பாட நெறியில் ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் சுமார் 45,000 ரூபா வரை செலவிட வேண்டியுள்ளதால் பெருந் தொகை கட்டணம் அறவிடப்படலாம் எனவும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்து பல்கலைக்கழக மாணவர்களும் இதனை எதிர்த்து வருகின்றனர்.

# கனடா விசா விவகாரம் செல்லச்சாமிமீது சி. ஐ. டி. விசாரணை

## அமைச்சர் தொண்டமான் தகவல்

[கொழும்பு]

கனடாவில் இலங்கைப் பிரஜைகளுக்கு அகதிகள் அந்தஸ்த்து பெற்றுக்கொடுத்த விவகாரம் தொடர்பாக முன்னாள் இ. தொ. கா. பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான செல்லச்சாமியின் நடத்தை குறித்து குற்றப்புலனாய்வு பொலிசார் தீவிர விசாரணை மேற்கொண்டுவருவதாக அமைச்சர் சௌ. தொண்டமான் தெரிவித்துள்ளார்.

வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படுவது தொடர்பாக பொதுமக்கள் முன்னணி கவனமுடன் செயற்படுவது நன்று. இதனால் தமது விரல்களை தாமே நெருப்பில் பொசுக்கிவிடக்கூடும் என சௌ. தொண்டமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள் பொதுச் செயலாளரும், ராஜாங்க அமைச்சருமான எம் எஸ் செல்லச்சாமி சுதந்திரக்கட்சியுடன் இணைந்து கொண்டமை தொடர்பாக 'சண்டே லீடர்' வார இதழுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

கனடாவில் சிறிலங்கா பிரஜைகள் பலரும்அகதிகள் அந்தஸ்துபெற்ற விவகாரம் தொடர்பாகவே செல்லச்சாமியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாகவும், இதுபற்றி கடந்த ஏப்ரல் மாதத்திலேயே திருமதி சிறிமாவோ தமது கவனத்திற்கு கொண்டுவந்திருந்ததாகவும் தெரிவித்துள்ளார். இவ் விவகாரம் பற்றி குற்றப்புலனாய்வு பொலிசார் தீவிர விசாரணை நடத்துவதாகவும் குறிப்பிட்டனர்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இவ் விசாரணையை நடத்தும்படி பணிப்புரை விடுத்திருப்பதாக குற்றப்புலனாய்வு பொலிசாரும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

# அமரர் துரைராசா உருவப்படம் திரை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் முன்னாள் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் அமரர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் உருவப்படம் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் புவியியற்துறைத் தலைவர் பேராசிரியர் பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் குணரட்ணம் அவர்கள் அமரரின் உருவப்படத்தை திரைநீக்கம் செய்து வைத்து மலர் மாலை அணிவித்தார்.

முன்னதாகமௌனஅஞ்சலியுடன் ஆரம்பமாகிய இந்நிகழ்வில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை நினைவுரையை நிகழ்த்தினார்.

இந் நிகழ்வில் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள், பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இறுதியாக நன்றியுரையை விரிவுரையாளர் அல்பேட் அவர்கள் நிகழ்த்தினார்.

(பா)

# உள்ளூர் பொருள்கள்மூலம் உணவுகள் தயாரிப்பு

ஜூலை 1 ஆம் திகதி முதல் உள்ளூர் தானியங்களைக் கொண்டு உணவுப் பண்டங்களை தயாரிப்பதென கடந்த 16 ஆம் திகதி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும் யாழ். நல்லூர் வர்த்தக சங்கத்திற்குட்பட்ட உணவுச்சாலை உரிமையாளர்களும் நடாத்திய கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உணவு விடுதிகளை திறம்பட நடாத்துவதற்கு தேவையான உள்ளீடுகளை பெற்றுக் கொள்ள முடியாத இன்றைய சூழ்நிலையில், உள்ளூரில் கிடைக்கக்கூடிய மூலப் பொருட்களைக் கொண்டு பாவனையாளரின் தேவையை நிறைவு செய்யவும், பொது சுகாதாரத்தைப் பேணவும், முதலீட்டாளர்கள் நன்மை பெறக்கூடிய வகையிலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் யாழ். பல்கலைக் கழக புறநிலைப்படிப்பு அலகினுடன் இணைந்து இத்தகைய செயற்பாட்டுப் பயிற்சியாக ''உணவு விடுதிக்கான முகாமைத்துவமும், பொது சுகாதாரமும்'' என்ற பயிற்சி நெறியினை அண்மையில் நடாத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# கோழி நோய்த்தடுப்பூசி

கோழிக் கொள்ளை நோயைத் தடுக்கும் பொருட்டு அரியாலை மணியரசன் குடியிருப்பில் வாழும் குடும்பங்களின் கோழிகளுக்கு கிராமிய உற்பத்திக் குழு ஊடாக நோய்த் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

இராணுவ நடவடிக்கையால் தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து கோழி வளர்ப்பில் ஈடுபட்டிருக்கும் இக்குடியிருப்பில் வாழும் குடும்பங்களின் கோழிகளுக்கே கடந்த 21-ம் திகதியன்று கால்நடை சுகாதார வைத்தியரின் உதவியுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் இந்நடவடிக்கையை மேற்கொண்டனர்.

# மிருதங்க அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

இளம் கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் எதிர் வரும் வெள்ளிக்கிழமை மாலை 4-30 மணிக்கு செல்வன் இராஜேஸ்வரன் பிரசாந்த் அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் தலைமைவகிக்கின்றார். பிரதமவிருந்தினர்களாக பேராசிரியர் ச. வை. பரமேஸ்வரன்

# பாராட்டு பெற இருந்தவர் கடத்தப்பட்டு தாக்குதல்

(மாத்தளை)

கடந்த 26 வருடங்களாக இரத்தோட்டை பிரதேச சபையில் நகரசுத்தி தொழிலாளராக கடமையாற்றி வந்த ஆனந்தராஜா என்ற நபரை பாராட்டி கௌரவிக்கும் முகமாக விழாவொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் விழாவுக்கு முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் இவர் கடத்தப்பட்டு தாக்கப்பட்டுள்ளார். தற்போது இவர் மாத்தளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது: ஆனந்தராஜா என்ற நபர் கடந்த 26 வருடங்களாக இரத்தோட்டைப் பிரதேச சபையில் நகர சுத்தி தொழிலாளராக கடமையாற்றி வருகிறார். இரத்தோட்டை பிரதேச சபை எதிர்க்கட்சியினர் இவரைப் பாராட்டி கௌரவிக்கும் பொருட்டு கடந்த 26-ம் திகதி விழா ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தனர். இதற்கென கிரிக்கெட் போட்டி ஒன்று நடத்தப்பட்டு வெற்றி பெறும் கோஷ்டிக்கு ஆனந்தராஜா வெற்றிக் கிண்ணம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக தெரியவருகிறது.

இந்த நிலையில் 24 ஆம் திகதி இரவு இவரது வீட்டுக்கு வந்த இனந் தெரியாத கோஷ்டியினர் வாகனம் ஒன்றில் இவரைக் கடத்திச் சென்றுள்ளனர் 26-ஆம் திகதி வரை இவர் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கவே மேற்படி விழா ஏற்பாட்டாளர்கள் இவரது மனைவியான மல்லிகாவை அழைத்து விழாவை நடத்தியுள்ளனர்.

இந்த விழா முன்னாள் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நந்திமித்திர ஏக்கநாயக்க தலைமையில் நடைபெற்றுள்ளது.

விழா முடிவடைந்ததை அடுத்து ஆனந்தராஜா என்ற நபர் தாக்கப்பட்டு இரத்தோட்டை வீதியில் போடப்பட்டுள்ளார். இவ்விடயம் உடனடியாக மாத்தளை நகரபிதா ரஞ்சித் அலுவிகாரவிற்கு அறிவிக்கப்பட்டது. அவர் நகர சபை வாகனம் மூலம் ஆனந்தராஜாவை மாத்தளை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்.

மாத்தளை பொலிசார் இது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றனர்,

# தேர்தல் பிரசாரங்களில் பொலிசார் பக்கசார்பு

(கொழும்பு)

வேட்புமனு தாக்கல் செய்தவுடனேயே தேர்தல் பிரசாரங்களின் போது பொலிசார்

ரட்ணவும் மாகாண சபை உறுப்பினர் கவிதா வன்னியாராய்ச்சியும் ஏஜென்சி செய்திஸ்தாபனமொன்றுக்குத்தெரிவித்துள்ளனர்.

## 3-ம் ஆண்டுநினைவலைகள்

14-07-1994



லெப். கேணல் சூட்டி

(இராசு செல்வேந்திரன்)

தமிழீழ மண்ணில்: 28-05-1967

தாயக மீட்பில்: 14-07-1991

## 45-ம் நாள் நினைவஞ்சலி



2-ம் லெப். மலையரசன் / கைலாஸ்

(குமாரசிங்கம் செங்காதரன்)

திருக்கோணமலை

தமிழீழ மண்ணில்: 28-05-1967

தாயக மீட்பில்: 14-07-1991

கண்ணில் தெரியுதே உன் முகம்
கனவாய்ப் போனதா உன் நியம்
எண்ணில் அடங்குமா எம் துயர்
ஒங்கும் இதயத்தில் ரண களம்
மண்ணின் விடிவிற்காய் உதிர்ந்த மலர்களே!
மனத்தில் நிறுத்தி நினைத்து கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்

சூட்டி வீதி,
கெருடாவில்,
சாவகச்சேரி.

(8802)

---

(குமாரசிங்கம் கங்காதரன்)

திருக்கோணமலை

கன்னியாவில் மழலையாய் 09- 10- 1977

அளவெட்டியில் மாவீரனாய் 31- 05- 1994

கோணமலையின் கன்னியா மண்ணில்
குமாரசிங்கம் மகனாய்ப் பிறந்தாய்!
தாயக விடுதலைத் தாகம் கொண்டு
தலைவன் அணியிற் புலியாய் இணைந்தாய்
நேயம் மிக்க மலையரசன் எம்
நெஞ்சில் நிறைந்தாய் நினைவிற் கலந்தாய்
ஓயா அலையாய் உன் புகழ் வாழும்
உயிர்ப்புடன் ஈழம் விரைவில் மலரும்

ஐயனார் கோவிலடி,
கல்வயல்,
சாவகச்சேரி.

- குடும்பத்தினர்

(8778)

---

தமவிருந்தினர்களாக பேராசிரியர் ச.வை.பரமேஸ்வரன் அவர்களும் திருமதி மகேஸ்வரி பரமேஸ்வரன் அவர்களும் கலந்து கொள்கின்றனர்.

மதிப்பீட்டுரையை பொன் சுந்தரலிங்கம் அவர்கள் நிகழ்த்தவுள்ளார்.

ரங்களின் போது பொலிசார் கட்சி சார்புடன் நடந்துள்ளார்கள். எனவே இத்தேர்தல் மிக மோசமான ஒன்றாக அமையும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் முன்னாள் பாராளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர் ஜோன் செனிவி

ஸ்தாபனமொன்றுக்குத்தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு பொலிசார் ஆதரவு நல்குவதாகவும் இவ்வாறான நடவடிக்கை தமக்கு பாதகமானதாகஅமையும் எனவும் அவர்கள் மேலும் கூறினர்

---

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| இராசேந்திரம் மாலினி | இராசேந்திரம் ஜெயந்தினி | இராசேந்திரம் ஜனகன் | இராசேந்திரம் திபாகரன் |
|---|---|---|---|
| ஆண்டவன் படைப்பு: 26-02-1979 | 21 - 10 - 1981 | 25 - 03 - 1983 | 09 - 09 - 1986 |

பாதகர் அழிப்பு: 14 - 07 - 1991

அன்னியர் புகுந்தனரே வெற்றிலைக்கேணிக்குள்
அநியாயம் புரிந்தனரே அரக்க வெறியுடனே
அன்னையவள் முன்னாலே நால்வரையும் அழித்தனரே
ஆறவில்லை வேதனைதான் அழுகின்றோம் அனுதினமும்.
உங்கள் ஆன்ம சாந்திக்காக ஆண்டவனை வேண்டுகின்றோம்.

வெற்றிலைக்கேணி, முள்ளியான்.


(8775)

- அம்மா, அப்பா, சகோதரர், உறவினர்.

---

# 3-வது ஆண்டு நினைவுகளில்

பிறப்பு 18 – 03 – 1964



இறப்பு 14 – 07 – 1991

## அமரர் குமாரலிங்கம் ரஞ்ஜகுமார்

( Political Science Lecturer
University of Jaffna )

இதயமதை துயர் நிறைக்க
விழிகளில் நீர் சுமந்து
உன் நினைவுகளுடன்
நித்தமும் நாம்....

உன் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(சி-9913)

- குடும்பத்தினர்


## வாக்களிப்பு நிலையத்தில் நான்கு பொலிசார் காவல்

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்கள் ஒவ்வொன்றிலும் நான்கு ஆயுதம் தரித்த பொலிசார் நிறுத்தப்படவிருப்பதாக தேர்தல் பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நிக்கலஸ் தெரிவித்துள்ளார்.

வாக்களிப்பு நிலையங்களின் உள்ளே இருவரும் வெளியே இருவருமாக கடமையாற்ற இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துளார்.

இதே வேளை தேர்தல் நடவடிக்கைகளில் பொலிஸாரின் தேவைக்காக மூவாயிரம் வாகனங்கள் பயன்படுத்தப்பட இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம்

26-07-1972

வீரச்சாவு

14-07-1991

### வீரவேங்கை றெஜி

**பொன்னையா பத்மநாதன் [பற்பர்]**

(சங்கானை வடலியடைப்பு)

நீர் எங்கள் வீட்டுக்கு ஒளி என - எண்ணியிருந்தோம். நீயோ நாட்டின் மண்ணுக்காக விதை - விளக்கானாய். எங்கள் ஆருயிர் செல்வமே - பற்பர், நீர் எங்களை விட்டுப் பிரிந்து மூன்று ஆண்டு ஆனாலும் உமது நினைவு எங்களை விட்டு அகலாது. வீரச்சாவடைந்த சக போராளிகளுக்கும் எமது அ ஞ் ச லி யை செலுத்துகிறோம்.

உமது நினைவால் வாடும்
அப்பா, அம்மா, அக்காமார்,
அத்தான், அண்ணா, தம்பி.

நவாலி தெற்கு.
மானிப்பாய். (8748)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



## பகுப்பாய்வாளர் விசாரணை

(கொழும்பு)

அனுராதபுரத்தில் இடம் பெற்ற ரயில் வெடிகுண்டுச் சம்பவம் தொடர்பாக அரச பகுப்பாய்வாளர்கள் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

பொலிசார் ஏற்கனவே இதுதொடர்பாக விசாரணைகளை நடாத்திவருகின்றனர். ரயில் மேல் எறியப்பட்ட கைக்குண்டானது சிறிய ரகத்தைச் சேர்ந்தது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## மா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப.நோ.கூ. சங்கம் தனது பாவனையாளருக்கு யாழ். செயலகத்தால் வழங்கப்பட்ட கோதுமை மாவை பங்கீட்டு அடிப்படையில் வழங்கி வருகிறது.

(88)

## றுகுணு வந்தது

(வடமராட்சி)

'றுகுணு' கப்பல் தனியாருக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் நேற்று முன்தினம் செவ்வாய் காலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தது. இந்தக் கப்பலில் சண்றைஸ் தனியார் வர்த்தகருக்கே கூடுதல் பொருள்கள் எடுத்துவரப்பட்டன. பொருள்கள் இறக்கும் வேலைகள் உடனேயே ஆரம்பமானது.

மேலும் இக்கப்பலில் யூலை மாத ஓய்வூதிய வவுச்சர்களும் தபால் பொதிகளும் எடுத்து வரப்பட்டன.

(யோ)

## நாட்டுக்கூத்து

(குருநகர்)


புனித கார்மேல் மாதா பெருவிழாவை முன்னிட்டு கார்மேல் மாதா இளைஞர் மன்றம் 16-ஆம் திகதி சனிக்கிழமை மாலை 7-30 மணிக்கு குருநகர், கார்மேல் விளையாட்டு மைதானத்தில் ''தர்ம பிரகாசன்'' நாட்டுக்கூத்து மேடையேற்ற இருக்கிறது.

(21)

## பரீட்சை

ஆங்கில தேசிய சான்றிதழ் (என் சீ ஈ) பரீட்சையின 11 ஆம் பகுதி 1994. யூலை மாதம் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கள் லூரியில் நடை பெறும். 11ம் பகுதிக்கு விண்ணப்பித்து, கொழும்பில் இப்பரீட்

## 3ஆம் ஆண்டின் நினைவழியா நினைவுகள்



### லெப்ரினன்ட் யாதவன்

**(கந்தையா கமலக்கண்ணன்)**

(கட்டைக்காட்டில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில்)

மழலையாய் மடியில்: 26-08-1969
மாவீரனாய் மண்ணில்: 14-07-1991

வார்த்தைகளால் வடிக்கமுடியாத உனது வரலாற்றை
உணர்வுகளால் எப்படி மறக்கமுடியும்
நீ மறைந்து மூன்றாண்டு மட்டுந்தான் போனது -
ஆனால்
நீ விதைத்த விதை இம்மண்ணில் பயிராகிப் போனது
உனது காலடிச் சுவடுகளின் ஓசைகளை
காணாது ஏங்கித்தவிக்கும் எம் இதயங்கள்
எரியும் நெருப்பாகி, வீசும் புயலாகி, ஓ யா த
சடலைபோல்
அலைமோதி, கலக்கமுற்று கதறுதய்யா.

ஓயாத உன் நினைவுகளில் வாடும்,
அம்மா, அப்பா, அக்காமார்,
அண்ணன்மார், தம்பிமார்,
தங்கையர்.

160, கண்டிவீதி,
அரியாலை.
(8777)

## மண்மீட்பில் தனையீந்த மாதரசி நினைவியம்பும்....

### 2-ம் ஆண்டு நினைவலைகள்



## மூன்றாம் ஆண்டு நினைவுநாள்



### லெப். மாக்கிறெட்

(சாந்தி சிற்றம்பலம்)

தாய் மடியில் மலராக
17. 2. 1971


தமிழீழ மண்ணில் விதையாக
14. 7. 1991

14. 7. 91 அன்று வெற்றிலைக்கேணியில் கடல் வழியாகத் தரையிறக்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்துடனான சமரில் வீரச்சாவடைந்த லெப். மாக்கிறெட் அவர்களின் மூன்றாம் ஆண்டு நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு போராளிகள், பொதுமக்களை அன்புடன் அழைக்கிறோம்.

வேம்படி உடுத்துறை,
வடமராட்சி கிழக்கு.

-குடும்பத்தினர்.
(8673)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### 2- ம் லெப். கதிரவன் (கீத்)

(குணசேகரம் -நகுலேந்திரன்)



## 2-ம் லெப். கடற்புலி பழனி
### அந்தோனிப்பிள்ளை (துரைசிங்கம்)
### அருள்தாஸ்

ஜனனம் 17. 12. 1973 — வீரச்சாவு 14. 07. 1991

தேசத்தின் மீது கொண்ட நேசத்தினால்
தேச விடுதலை வேண்டி நின்று
மரபுவழி யுத்தத்தில் மார்பிலே குண்டேந்தி
மண்ணின் விடியலுக்காய்..
தன்னுயிர் தனை ஈந்த
பருத்திநகர் ஈன்றெடுத்த...
தவப்புதல்வன் பழனியவன்
ஆண்டுகள் மூன்று யுகமாக மறைந்தாலும்
மறவோம், மறவோம், மகனே
மறவோம் மறவோம், உனையே
தமிழீழம் உள்ளவரை - எமக்காக...
நீர் வாழ்ந்தது போல்
உன் நினைவை உள்ளத்தில் வைத்து
உருகிக் கொண்டிருக்கின்றோம்.

அருள்தாசின் ஆன்மசாந்திக்காக தும்பளை புனித மரியன்னை ஆலயத்தில் மாலை 5 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

உங்கள் பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்கள்.

(8796)

---

...த்து, கொழும்பில் இப்பரீட்சைக்குத் தோற்றாதவர்கள் யாழ்ப்பாணத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். இது வரை யாழ்ப்பாணம் (வலயம் 1) கல்வித்திணைக்களத்தில் தமது பெயரைப் பதியத் தவறிய பரீட்சார்த்திகள் தமது பெயர்களைப் பதியுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## 175 ஆம் ஆண்டு விழா

யாழ் மத்திய கல்லூரியின் 175ஆம் ஆண்டு விழா எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதி அனுட்டிக்கப்படவுள்ளதாக கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது.

## நாடகமும் அரங்கியலும்

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின்மணிவிழாநிகழ்ச்சித் தொடர் - 07 இல் நாடகமும், அரங்கியலும்கல்வியியற் கருத்தரங்கு நாவலர் கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 16-ம், 17-ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

16-ம் திகதி சனி காலை 8 30 தொடக்கம் பிற்பகல் 4 30 மணிவரையும் ஞாயிறு காலை 8.30 மணிமுதல் 12.30 மணிவரையும் கருத்தரங்கு நடைபெறும்.

## உருவப்பட திரைநீக்கம்

மூதறிஞர் பல்கலைப் புலவர் அமரர் க. சி. குலரத்தினம் அவர்களின் உருவப்பட திரைநீக்கமும் நினைவுப்பேருரையும் எதிர்வரும் சனி மாலை 4 00 மணிக்கு யாழ். பொதுசன நூலக நல்லூர் கிளையில் நடைபெறும். உருவப்படத்தை யாழ் அரச அதிபர்கா. மாணிக்கவாசகர் திறந்து வைப்பார். ''பனைவளமும் தற்சார்பு பொருளாதாரமும்'' என்ற தலைப்பில் பொருளியல்துறை தலைவர் பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் நினைவுப் பேருரையும் ஆற்றுவார்.

---



வேவுப்படைப் பெண்புலி

## கப்டன் தேனுஜா
### (சிவலிங்கம் மதனிகா)

தாயின் மடியில் 12-03-1971 — தமிழ்த்தாய் அடியில் 14-07-1992

ஆனையிறவாம் அரக்கர் பாசறை
அழிந்திட அண்ணன் அணிபுரி போரில்
தானையுள் நுழையத் தகவல் பெற்றிடத்
தனையை நீ செய்பணி மறந்திடப் போமோ?
பூனைவாழ் வினிமேற் தமிழருக் கில்லையோர்
புகழ்ப்புலி வெற்றியின் சங்கதை முழங்கும்
தேனுஜா உன்னருங் கனவுகள் வெல்லும்
தீந்தமிழ் ஈழம் விரைவினிற் புலரும்!

''இரண்டாம் ஆண்டின்
அஞ்சலி ஈந்தோம்
இன்யவள் உந்தன்
திருவடி மறவோம்.''

இன்று (14-07-94) எமது இல்லத்தில் நடைபெறும் இரண்டாம்ஆண்டு நினைவஞ்சலியிலும், மதிய போசனத்திலும் போராளிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

1-ம் கட்டையடி,
தொண்டமானாறு. — குடும்பத்தவர்

(8782)

---

அரியாலை கிழக்கு.

தாயின் மடியில் 01-02 1970 — தாயக மண்ணில் 14-07-1992

கட்டைக் காட்டினிலே களமாடி
கதிரவனே கனத்த பகை முடித்தாய்
கடுஞ் சமரில் குண்டேந்தி விழுப்புண் ஏற்றாய்- இன்று
கல்லறையிலே காவியமாய் கண்ணயர்வாய்.

அரியாலை கிழக்கு,
அரியாலை. — குடும்பத்தினர்

(8774)

---

## துயரினில் துவளும் எங்கள்
## ஓராண்டு நினைவஞ்சலி



## உயர்திரு. கனகசபை சிவபாதசுந்தரம்
(முன்னாள் அதிபர்- யாழ்- விக்னேஸ்வராக் கல்லூரி)

தவப்பேறு: 26-12-1934 — சிவப்பேறு: 14-07-1993

தெய்வமே...!
எங்களுக்காக துடித்த உங்கள் இதயம்
ஏன்...! உங்களுக்காக
இன்னும் சில காலம் துடிக்க மறுத்தது?

உண்டுவத்தை,
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி.

இறைநிழலில் ஆத்மா சாந்திபெற
பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள் ,மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

(8779)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

## சிந்தனைக்கு..

தான் விதைப்பதையே அவனால் அறுவடை செய்யவும் முடியும்.

- புனிதர் பவுல்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 14-07-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

# தேர்தல் வன்முறை

எதிர்பார்க்கப்படுவது போலவே தேர்தல் கால வன்முறைகள் உச்சமாக இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் தெளிவாகத் தெரிகின்றன. நியமனப் பத்திரம் தாக்கல் செய்வதற்கான இறுதிநாள் அன்றும், அடுத்த நாளுமாக இடம்பெற்ற வன்முறையில் அமைச்சர்கள், வேட்பாளர்க உட்பட 200க்கும் மேற்பட்டோர் காயப் பட்டதில் இருந்தே இதனைப் புரிந்து கொள்ள முடியும்.

சிறிலங்காவின் 'ஜனநாயக மரபில்' தேர்தல் வன்முறை என்பது இம்முறைக்குரிய புதிய வெளியீடல்ல. கடந்த காலத் தேர்தல்கள் சில பெரும் வன்முறையின் உச்சக்கட்டத்திலேயே நடத்தப்பட்டன. ஆயினும், கடந்த காலத் தேர்தல் வன்முறைக்கும், இம்முறை தேர்தல் வன்முறைக்கும் இடையில் வேறுபாடுகள் சில இருக்கத்தான் செய்கின்றன.

1988, 1989 ஆம் ஆண்டுகளில் முறையே இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் என்பனவற்றின்போது சிறிலங்கா ஆயுதப் படையினரும் அரசிற்கெதிரான ஆயுதம் தாங்கிய குழுவினருமே வன்முறைக்குப் பிரதான காரணமாக இருந்தனர். இதேசமயம் அரசின் சட்டவிரோத ஆயுதக் குழுவினர் எதிர்க்கட்சித் தரப்பினரை மிரட்டி வந்தனராயினும் எதிர்த் தரப்பில் இருந்தும் அதற்குப் பலமான ஆட்சேபம் கிளப்பப்படவில்லை. எதிர்நடவடிக்கை எடுக்கவும் முடியவில்லை. இதற்கு கிளர்ச்சிக்காரர்கள் குறித்து எதிர்த் தரப்பினர் கொண்டிருந்த அச்சமும், அதே சமயம் அவர்களுக்குள் இருந்த முரண்பாடு, பலவீனம் என்பனவும் காரணமாக இருந்தன என்றே சொல்ல வேண்டும்.

ஆனால், இம்முறை தேர்தலின்போது எதிர்பார்க்கப்படும் வன்முறையானது 'ஜனநாயக ரீதியான தேர்தலில்' போட்டியிடும் இரு பிரதான கட்சிகளுக்கும் இடையிலானதாகவே எதிர்பார்க்கப்படுகின்றது. இது ஜனநாயக மரபுகளுக்கு அப்பாற்பட்டதாக தேர்தலுக்கு பல வழிகளில் குந்தகம் விளைவிக்கவும் கூடும்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்து இது ஒரு ஜீவமரணப் போராட்டத்திற்கான தேர்தல் என்றே கொள்ள முடியும். கடந்த இரு தசாப்தங்களில் ஐக்கிய தேசியக் கட்சி இதுபோன்ற பலவீனமான

பொதுத் தேர்தலுக்கான

# பாதுகாப்பு முன்னேற்பாடு; பொலிசாருக்கு அறிவுறுத்து

(கொழும்பு)
இம் முறைநடைபெறவுள்ள பொதுத் தேர்தலின்போது தேர்தல் வேட்பாளர் அரசியல் வாதிகள் அவர்களின், பாதுகாப்பு அதிகாரிகள் எவரும் ஆயுதங்களுடன் வாக்களிப்பு நிலையத்தின் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதே வேளை தேர்தலில் போட்டியிடும் ஒன்றுக்கு மேற்பட்ட அபேட்சகர்கள் ஒரே நேரத்தில் வாக்களிப்பு நிலையத்திற்கு செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள். தனிப்பட்ட நபர்கள் யாரும் ஆயுதங்களுடன் நடமாடுவது, வாக்களிப்பு நிலையத்திற்கு வருவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் நடவடிக்கை தொடர்பாக கடமையில் ஈடுபடும் சகல பொலிஸாருக்கும் இது தொடர்பான சுற்று நிருபம் அனுப்பப்பட்டுள்ளது. இதில் தேர்தல் தொடர்பான சகல விதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்தெரியவருகிறது. தேர்தல் வாக்களிப்பு நிலையங்கள் மட்டும் அன்றி ஏனைய பகுதிகளுக்கும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் வாக்களிப்பு ஆரம்பமாக முன்னரும் தேர்தல் கடமையில் ஈடுபடும் சகலரும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டும் என்றும் இதன் பின்னரே இவர்கள் தேர்தல் கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தல் செய்யப்பட்டுள்ளது.

## பரீட்சை மண்டபங்களுக்கு அருகேஒலிபெருக்கித் தடை

(கொழும்பு)
எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் க.பொ.த. (உ/த) பரீட்சை நிலையங்களுக்கு அண்மையில் தேர்தல் பிரசாரத்துக்காக ஒலி பெருக்கிகள் உபயோகிப்பதை தடுக்கவிருப்பதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தத் தடைக்கு அரசு உடன்பட்ட பின்னரே ஆகஸ்ட் ஒன்று முதல் பதினொன்று வரையிலான முதற்கட்டப்பரீட்சைக்கு தயாராக்கல்களைச் செய்துள்ளதாக பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பரீட்சை நிலையங்களிலிருந்து குறிப்பிட்ட தூரம் வரை பிரசாரங்களில் வேட்பாளர்கள் ஈடுபடுவதை பொலிஸார் தடுப்பர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாடெங்கிலுமுள்ள 500 பரீட்சை நிலையங்களில் இருகட்டங்களாக பரீட்சை நடைபெறவுள்ளது.

## நிர்வாகசேவைப் பரீட்சைக்கு வயதெல்லை அதிகரிப்பு

(கொழும்பு)
இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான வயதெல்லை மேலும் ஐந்து வருடங்களால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்னர் 26 வயதாக அறிவிக்கப்பட்ட வயதெல்லை இனிமேல் 31 வயதாக இருக்கும். இதேவேளை மேற்படி பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத்திகதியும் பின்போடப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

## உயர்தர பரீட்சார்த்திகளுக்கு விரைவில் அடையாள அட்டை

(கொழும்பு)
க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அடையாள அட்டைகள் தாமதமின்றி கிடைக்க வழி செய்யப்பட்டிருப்பதாக ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாடசாலை அதிபர்களும், கிராம சேவகர்களும் உடனடியாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

அடையாள அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளும்படியும் திணைக்களம் கேட்டுள்ளது.

## பொதுஜன ஐ.மு. பேரில் போலிவிளம்பரம்வெளியீடு

(கொழும்பு)
எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவோம் என்ற தலைப்பினாலான பத்திரிகை விளம்பரமொன்றை பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா மறுத்துள்ளார்.

மேற்படி தலைப்பிலான விளம்பரத்தில், பொதுஜன முன்னணியின் பெயரில் முன்னணியின் சம்மதம் பெறாத பொருளாதார வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருப்பதாக

## பொது நூலகம் திறப்பு

தாயக மண்மீட்புப் போரில் தம்மையே அர்ப்பணித்த கரும்புலிகள் நினைவாக வவுனியா கோட்டத்தில் தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் பொது நூலகம் ஒன்றை அமைத்துள்ளனர்.

இவ்வாறு அமைக்கப்பட்ட இந்நூல் நிலையம் கடந்த 5-ம் திகதியன்று வன்னி மாவட்ட தளபதி திரு. குட்டிஅவர்களால் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வுக்கான மங்கள விளக்கை புளியங்குள கிராமப் பொறுப்பாளர் திரு. முல்லைமணி ஏற்றிவைக்க ஈகச் சுடரை கோட்டத்தின் நிறுவன இணைப்பாளர் ஏற்றி வைத்தார். தொடர்ந்து தேசியக்கொடியை வவுனி

## ஹேமாவின் திட்டத்தை முறியடித்த விஜேதுங்கா

(கொழும்பு)
ஒஸி அபேகுணசேகரவின் மக்கள் கட்சியில் ஜனாதிபதி வேட்பாளராக திருமதி ஹேமா பிரேமதாசா போட்டியிட இருந்ததாகவும் இத் திட்டத்தை முறியடிக்கவே ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடத்த முடிவுசெய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை விஜேதுங்காவின் எதிரணியைச் சேர்ந்த ஐ.தே.க. உறுப்பினர்கள் ஹேமா பிரேமதாசாவை ஜனாதிபதி வேட்பாளராக நியமனம் செய்வது தொடர்பாக ஆயத்தங்களை மேற்கொண்டு இருந்ததாக இரகசிய தகவல்மூலம் தெரிய வந்துள்ளது.

இந்த நிலையை முறியடிக்கும் நோக்குடனே பொதுத் தேர்தலை முதலில் நடத்த விஜேதுங்கா முன்வந்தார் என கூறப்படுகிறது.

## பேரன் உயிரைக் காக்க மகன் உயிரை பறித்த தாய்

தனது மூன்று வயது பாலகனை நிலத்தில் அடித்து மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைக்க முயன்ற இளம் தந்தையின் செயலால் ஆத்திரமுற்ற அவனது தாய் இரும்புக்கம்பியால் தாக்கி பெற்ற மகனையே கொன்ற கொடூர சம்பவம் ஒன்று அண்மையில் கலகெதர பொலீஸ் வட்டாரத்தைச் சேர்ந்த பல்லேகொட்டுவ எனும்கிராமத்தில் நடைபெற்றது.

பெட்ரம் மெதகம எனும்27 வயதுடைய நபரே இவ்வாறு கொல்லப்பட்டவராவார். இச்சம்பவம் குறித்து தெரிய வருவதாவது:

சம்பவ தினம் இரவு 7.45 மணியளவில் காலஞ் சென்றவர் மதுபோதையில் வீட்டுக்கு வந்து தனது மூன்றுவயது குழந்தையை தூக்கி நிலத்தில் அடித்து மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்து கொலை செய்ய எத்தனித்தாராம்.

இதைக்கண்ட காலஞ்சென்றவரின் தாயார் ஆத்திரமுற்று குழந்தையைக் காப்பாற்ற முயன்றபோது தாயை அவர் உலக்கையால் தாக்க முற்பட்டாராம். அதைப்பறித்து எறிந்த தாய், இரும்புப் பொல்லால் மகனை தாக்கியுள்ளார். இதனால் மகன் துடிதுடித்து இறந்தார்.

இது குறித்து பொலிசார் தெரிவிக்கையில் காலம் சென்ற நபர் மனைவியைப் பிரிந்து தன் பிள்ளையுடன் வாழ்ந்து வருவதாகவும் சம்பவ தினம் தனது மூத்த சகோதரியையும் கழுத்தை நெரித்து கொலை செய்ய முயன்றதாகவும் விசாரணை மூலம் தெரியவந்ததாகவும் சம்பவ தினம் தனது குழந்தைக்கும், தாய்க்கும் காயங்களை விளைவித்ததாகவும் கூறினர். தாயார் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஜே. ஓ. சி. குண்டுவெடிப்பு

## குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் எதிரிகளுடையது அல்ல

எதிர்த்தரப்பில் வாதம்

ஜே.ஓ.சி. குண்டு வெடிப்பு வழக்கில் 2ஆம் 4 ஆம் எதிரிகள உதவி பொலிஸ் அத்தியட்சர் எஸ். பி. ரணசிங்க முன்னிலையில் வாக்குமூலம் எதுவும் அளிக்கவில்லை. அரசு தடயப் பொருளாக சமர்ப்பிக்க முற்படும் இந்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் சிருஷ்டிகர்த்தா ஏற்கனவே எதிரிகளிடம் வாக்கு மூலம் பெற்ற இன்ஸ்பெக்டர் நிலாப்தீனே என்று சட்டத்தரணிகள் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, எம். இளஞ்செழியன் ஆகியோருடன் ஆஜரான ஜி.ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) வாதாடினார்.

டர் நிலாப்தின் சீ. டீ.பி கொண்டு வருமாறு கேட்டதற் கிணங்க பொலிஸ் சார்ஜன்ட் கருணாசிறி கொண்டு வந்தார் எதிரிகள இன்ஸ்பெக்டரிடமே மீண்டும் கையளிக்கப்பட்டார்கள் என்பதை சாட்சி ஒப்புக்கொண்டார்.

1 ஆம் 2 ஆம், 3 ஆம் 4 ஆம் 6 ஆம் எதிரிகளின் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள முதல் 11 வரிகளும் ஒரே மாதிரியாக உள்ளன. இந்த வேலையை கடவுளாலும் செய்ய முடியாது என்று ஜி.ஜி பொன்னம்பலம் (ஜூனியர்) கருத்து வெளியிட்டார்.

கொள்ள முடியும். கடந்த இரு தசாப்தங்களில் ஐக்கிய தேசியக் கட்சி இது போன்ற பலவீனமானதொரு நிலையில் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளவில்லை. இந்நிலையில், கடந்த 17 வருட காலமாக ஆட்சியிலிருந்த கட்சி தனது எதிர்காலத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக தன்னால் ஆன முழு முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்றே கூறலாம்.

இந்தவகையில் தேர்தல் கால வன்முறையை ஐ. தே. க. நடத்த முற்படுவதில் ஆச்சரியம் எதுவுமில்லை. அதற்கு இதைத்தவிர வேறு மார்க்கமும் இருப்பதாக இல்லை. ஆகையினால் தமது ஆதரவாளர்களையும், பாதாள உலக கிரிமினல்களையும் இதில் அது ஈடுபடுத்த முடியும். ஏற்கனவே இவ்வாறான சில நடவடிக்கைகளை அவதானிக்கக் கூடியதாகவும் உள்ளது.

ஆனால், கடந்த 17 வருடங்களாக ஐ. தே. கட்சியின் தேர்தல் மோசடிகள், வன்முறைகளைப்பார்த்துக் கொண்டும், சகித்துக் கொண்டும் இருந்த எதிர்த்தரப்பினர் இம்முறையும் அவ்வாறு பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

ஏனெனில், கடந்த 17 வருட காலப் பகுதியில் இம்முறை எதிர்த்தரப்பினர் என்றுமில்லாதவாறு பலத்துடன் மட்டுமல்ல, ஆட்சிக்கு வருவோம் என்ற நம்பிக்கையுடனும் உள்ளனர். மக்களின் அலை தம் பக்கம் அடிப்பதாக கருதும் எதிர்த்தரப்பினர் ஐ. தே. கட்சியின் மிரட்டல்களுக்கோ அன்றி மோசடிக்கோ பெருமளவில் இடம்கொடுக்க மாட்டார்கள். எதிர்த்து நிற்கவே முற்படுவார்கள். சில இடங்களில் பழி தீர்க்கும் வகையில் இவர்களே முந்திக்கொள்ளவும் கூடும்.

இந்நிலையில் அதிகாரத்தைத் துறக்க விரும்பாத ஐக்கிய தேசியக் கட்சி வன்முறை மூலம் ஆட்சியை தக்க வைத்துக்கொள்ள முற்படுவதும், அதிகாரத்தைக் கைப்பற்றுவோம் என்ற நிலையில் வன்முறையை வன்முறை மூலமே எதிர்கொள்ள எதிர்த்தரப்பு முற்படுவதும், தென்னிலங்கைத் தேர்தல் களத்தில் இரத்தம் சிந்தப்படுவதும் தவிர்க்க முடியாது போகலாம்.

ஆனால், இவ்வாறானதொரு நிலைக்கு வெளிப்படையாகப் பார்க்கின் கடந்த 17 வருட கால ஐ. தே. கட்சியின் ஆட்சியும், அது தேர்தலில் அறிமுகப்படுத்திய மோசடியும், வன்முறையுமே காரணம் என்று குறிப்பிடலாம். இதனையே ஆழமாக நோக்கினால் இன்றைய இந்நிலைக்கு தமிழ்மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைக்கு இராணுவத்தின் மூலம் தீர்வு காண சிங்களப் பேரினவாத சக்திகள் முற்பட்டதன் விளைவே என்பது தெரியவரும்.

யின் தலைவர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தாம் வெளியிடவில்லை என ...கள் வழங்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

## ராணுவ அதிகாரிகளின் குடும்பங்கள் வெளியேற்றம்

(கொழும்பு)

கொழும்பில் தற்போது நிலவுகின்ற பாதுகாப்பற்ற நிலை காரணமாக இராணுவ தலைமையக எல்லைக்குள் வசிக்கும் இராணுவ உயர் அதிகாரிகளின் குடும்பங்கள் வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது. பல உயர் அதிகாரிகள் தங்கள் குடும்பங்களுடன் வெளியேறியுள்ளனர்.

பல அதிகாரிகள் கடமை நேரங்கள் தவிர தலைமையகத்தில் தங்குவதை விரும்புவதில்லைஎனவும் கொழும்பு சஞ்சிகை ஒன்று தெரிவித்துள்ளது.

## பொதுமக்களை தாக்கிய படை அதிகாரி தலைமறைவு

(கொழும்பு)

மாரவெல பகுதியில் பொது மக்கள் மீது தாக்குதல் நடத்திய இரு இராணுவ அதிகாரிகள் தலைமறைவாகியுள்ளனர். இவர்களை தேடும் நடவடிக்கையில் இராணுவப் பொலிசாரும், பொலிசாரும் கூட்டாக ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த கப்டன் தர அதிகாரி ஒருவரும் லெப்டினன்ட் தர அதிகாரியுமே இவ்வாறு பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியதற்காக தேடப்பட்டு வருபவர்களாவர்.

## 1440 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் குதிப்பு

(கொழும்பு)

196 பாராளுமன்ற அங்கத்தவர்களை தெரிவு செய்வதற்காக 1440 வேட்பாளர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். 22 தேர்தல் மாவட்டங்களுக்கான நியமனப்பத்திரம் ஏற்றுக் கொள்ளுதல் நேற்றுமுன்தினம் நண்பகலுடன் முடிவடைந்தது.

13 அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிகளும் 26 சுயேட்சை குழுக்களும் போட்டியிடுகின்றன. 31 சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்திய போதிலும் 30 குழுக்களே நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்திருந்தன. நான்கு சுயேட்சை குழுக்களின் நியமனப்பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சி இருபத்தியொரு மாவட்டங்களிலும், பொதுஜன ஐக்கிய முன்னணி பதினெட்டு மாவட்டங்களிலும், சிறிலங்கா பிரதிசீலி பெரமுன பதினெட்டு மாவட்டங்களிலும் போட்டியிடுகின்றன.

இதே வேளை மக்கள் ஐக்கிய முன்னணி பன்னிரண்டு மாவட்டங்களில் போட்டியிடுகின்றன.

வைத்தார். தொடர்ந்து தேசியக்கொடியை வவுனியாக் கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் திரு குட்டிமணி ஏற்றிவைக்க நூலகத்தின் பெயர்ப் பலகையை வவுனியா கோட்ட தமிழீழ பொது நிர்வாக சேவைப் பொறுப்பாளர் குலதீபன் திரை நீக்கம் செய்து வைத்தார்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994.07.14
### வியாழன் இரவு

08. 01- சொல்லுங்கள் பார்க்கலாம்
08, 10- உரை நூலகங்களும் நூல்களின் பயன்களும்
08. 20- உழைப்போம் உயர்வோம் யாழ்பல்கலைக் கழக கிளிநொச்சி விவசாயபீட டயிரியல் துறைத் தலைவர் எஸ். இராசதுரை அவர்களுடனான செவ்வியின் இறுதிப்பகுதி
08. 30- செய்திகள்
08. 40- ஏட்டிலிருந்து- நாடு அழைத்தது என்ற புத்தகத்திலிருந்து பங்களாதேஷ் தேசிய விடுதலைப்போர் என்ற கட்டுரையின் சில பகுதிகள்
08. 50-மலரும் மொட்டுக்கள்

### 1994.07.15
### வெள்ளி காலை

07. 02- மாவீர வணக்கம்
07. 15- விடுதலை கானங்கள்
07. 30- செய்திகள்
07. 35-பத்திரிகைச்செய்திகள்
07. 40- விடுதலை கானங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

னார்.

மேல் நீதிமன்ற நீதிபதி லெஸ்லி அபயசேகர முன்னிலையில் நடக்கும் இந்த வழக்கில் இப்போது 2ம், 4ம், 5ம் எதிரிகளே உள்ளனர்.

2ஆம், 4ஆம், எதிரிகளின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை 91அக்டோபர் 7 ஆம், 9 ஆம் திகதிகளில் பதிவு செய்ததாக சொல்லப்படும் உதவி பொலிஸ் அத்தியட்சர் எஸ். பி. மில்கின் எதிர்த்தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணியால் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

பொலிஸ் பதிவேடுகளின்படி எதிரிகளை இன்ஸ்பெக்டார்.

இதற்கு அரச சட்டவாதி கோலித தர்மவர்த்தன ஆட்சேபனை தெரிவித்தார்.

ஜி.ஜி. தமது கூற்றை மீளப்பெற்றார். மேல் விசாரணை இம் மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

உதவிப் பொலிஸ் அத்தியட்சர் நந்தன விஜயரட்ண இன்ஸ்பெக்டர் நிலாப்தீன் ஆகியோருக்குஅழைப்பாணை அனுப்பப்பட்டது.

5 ஆம் எதிரிசார்பில் சட்டத்தரணி கே. எல் பாலகிருஷ்ணன் என். ரவிராஜ் ஆகியோருடன் சட்டத்தரணி எல். ஸ்ரீகாந்தா ஆஜரானார்.

## லிபரல் கட்சியுடனும் மு. காங்கிரஸ் ஒப்பந்தம்

பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் தேர்தல் ஒப்பந்தமொன்றை மேற்கொண்ட முஸ்லிம் காங்கிரஸ், லிபரல் கட்சியுடன் மேலும் ஓர் தேர்தல் ஒப்பந்தம் ஒன்றை நேற்று கைச்சாத்திட்டுள்ளது.

நேற்று நண்பகல் பம்பலப்பிட்டி லிபரல் கட்சியின் காரியாலயத்தில் தலைவர் சாணக்க அமரதுங்காவுடன் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம்அஷ்ரப் இத்தேர்தல் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளார் என தெரிய வந்துள்ளது.

## ராஜீவ் கொலை வழக்கு ஒரு வருடத்தில் முடியாது

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பான வழக்கு விசாரணை மேலும் பின்தள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

பூந்தமல்லி விசேட நீதிமன்றத்தில் நீதிபதி எஸ்.எம் சித்தீக் தலைமையிலான விசாரணைக்குழு கடந்த ஜனவரி 19ம்திகதியன்று ராஜீவ்காந்தி கொலைவழக்கு விசாரணைகள் ஆரம்பமாகியது தெரிந்ததே-

சுமார், ஐந்நூறுக்கும் அதிகமான தெரிந்து எடுக்கப்பட்ட சாட்சியங்களில் இதுவரை 52 பேர் மட்டுமே விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் வாரத்தில் நான்கு நாட்கள் முழுநாள் விசாரணை நடத்தப்பட்டாலும்கூட திட்டமிட்டபடி ஒரு வருடத்தில் விசாரணை பூர்த்தியாகுமா என்பது சந்தேகமே எனவும் கூறப்படுகிறது-

எனினும் சட்டப்பிரச்சினைகள் மற்றும் சட்டத்தரணிகளின் ஆட்சேபனைகள் என்பவற்றால் வழக்கு விசாரணை மேலும் தாமதப்பட்டு வருகின்றது எனவும் கூறப்படுகின்றது-

## பிறமாவட்டத்தில் தங்கிய யாழ். வாசிகளுக்கு மவுசு

(கொழும்பு)

யாழ் மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்து பிறமாவட்டங்களில் தங்கும் அகதிகளுக்கு இப்போது என்றுமில்லாதவாறு மவுசு ஏற்பட்டுள்ளது தங்குவதற்கு இடமில்லாமல் உற்றார் உறவினர் வீடுகளில் தங்கும் இவ் அகதிகளை இப்போது பலரும் நாடி குசலம் விசாரித்து வருகின்றார்கள்

நீண்ட நாட்களாக பார்க்க வேண்டுமென்ற ஆசை இப்போது தான் கைகூடியிருப்பதாக குசலம் விசாரிப்போர் கூறவும் தவறுவதில்லையாம்.

முன்னர் அறிமுகமில்லாத பலரும் தேடி வருகிறார்கள தேர்தலுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும் என இது குறித்து யாழ் வாசி ஒருவர் தெரிவித்தார்.

## வயோதிபப் பெண்ணின் சடலம் கண்டெடுப்பு

(தென்மராட்சி)

வயோதிபப் பெண் ஒருவருடைய சடலம் கொடிகாமம் ஐயனார் கோவிலடி மயானத்தில் காணப்பட்டு பொது மக்களால் கண்டு எடுக்கப்பட்டது

நேற்று கண்டெடுக்கப்பட்ட இச் சடலம் அதே இடத்தைச் சேர்ந்த கணபதி சின்னம்மா (வயது 65) என்பவருடையது என இனம் காணப்பட்டது. சடலத்தில் பலத்த அடிகாயங்கள் காணப்பட்டுள்ளன இவரது மரணம் தொடர்பாக சாவகச்சேரி காவல்துறையினர் சடலத்ினை பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி மருத்துவமனையில் கையளித்து மேலதிக விசாரணையில் ஈடுபட்டுள்ளனர் (86)

## யாழ். பாடசாலைகள் வலைப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடாத்தும் மாவட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதிப் போட்டிகள் இன்று பிற்பகல் 2 30 மணிககு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

17 வயதுப் பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயமும், மெதஸ்ட் மகளிர் கல்லூரியை எதிர்த்து வட இந்து மகளிர் கல்லூரியும் மோதும்.

19 வயதுப் பிரிவில், உடுவில் மகளிர் கல்லூரியை எதிர்த்து கன்னியர் மடம் மகாவித்தியாலயமும். சுண்டிக்குளி மகளிர் கல்லூரியை எதிர்த்து மெதடிஸ்ட் மகளிர் கல்லூரியும் மோதும்.

## மைசூர் பருப்பின் விலை சங்கங்களிடையே வேறுபாடு

(யாழ்ப்பாணம்)

மைசூர் பருப்பின் விலை சங்கங்களுக்கிடையே பெரும் வித்தியாசத்தில் விற்பனை செய்யப்படுகிறது. தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் போன்றவை ஒரு கிலோ மைசூர் பருப்பை 26 ரூபா விற்கு விற்கும் போது யாழ்ப்பாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 40 ரூபாவாக விற்பனை செய்து வருகின்றது.

தெல்லிப்பளை, சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் 26 ரூபாவிற்கு மைசூர் பருப்பு விற்பனை செய்ய முடியும் போது ஏன் யாழ்ப்பாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பெரும் விலை வித்தியாசத்தில் விற்பனை செய்ய வேண்டும் என பாவனையாளர்கள் விசனம் கொண்டுள்ளனர்.

இதேவேளை தனியார் கடைகளில் 35 ரூபாவாகவும் வர்த்தகத் திணைக்களத்தில் 38 ரூபாவாகவும் பருப்பு விற்பனை செய்யப்படுகின்றதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

## திருகோணமலை மாவட்டத்தில் மூன்று போராளிகள் வீரச்சாவு

கடந்த 5-ம் திகதி பி. ப 5.30 மணியளவில் திருகோணமலை மாவட்டம் கடவானைப் பகுதியில் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகள் போராளிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் தாக்கியதில் மூன்று விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்

வீரச்சாவடைந்த கப்டன் ராமன் (பங்கண்ணன் (சந்தனம் செல்லக்துரை, திருகோணமலை), லெப். சிவசீலன் (இளங்கோவன் (மகேந்திரன் நிர்மலகாந்தன், திருகோணமலை), வீரவேங்கை வான்தீகன் (கனகலிங்கம் குகனேசன், திருகோணமலை) ஆகிய மூன்று போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.



கப்டன ராமன் (பங்கண்ணன்)



லெப். சிவசீலன் (இளங்கோவன்)

## பொதுக் கூட்டம்

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க விசேட பொதுக் கூட்டம் 1'ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் சைவப்புலவர் திரு நா. க தங்கரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

## அவசர காலநிலை நீக்கம்

(கொழும்பு)

அவசர கால நிலை இன்று முதல் நீக்கப்படும் எனவும் அவசர கால நிலை இல்லாமலேயே தேர்தல் நடத்தப்படும் எனவும் அமைச்சர் காமினி திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

### முஸ்லிம்

கிப் பிரயோகம் செய்ததாகவும் ஸ்தலத்திற்கு இராணுவம் அழைக்கப்பட்டு அவர்களின் உதவி பெறப்பட்டதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

### துணைப்படை

ண்டு வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

வீரவேங்கை நவரட்ணம் நற்குணம் (வயது 30, மட்டக்களப்பு) என்ற இரு பிள்ளைகளின் தந்தையான துணைப் படை வீரரே வீரச்சாவைத் தழுவிக் கொண்டவராவார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### வன்னி

வீரச்சாவடைந்த வவுனியா கோட்டப் பொறுப்பாளர் மேஜர் வாசன் (மன்னன் (பாலசிங்கம் விக்னேஸ்வரன், செட்டிக்குளம் தற்போதைய முகவரி - தம்பனை, மன்னார்

## வடக்கு-கிழக்குப் பிரச்சினையை ராணுவ ரீதியாக வெற்றிகொள்க

### சிங்கள விடுதலை முன்னணி கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பிரச்சினையை ஒரு பயங்கரவாதப் பிரச்சினையாகக் கருதி அதனை இராணுவ ரீதியாக வெற்றிகொள்ளல் வேண்டும். இப் பிரச்சினையை ஒரு இனப் பிரச்சினையாகக் கருதக் கூடாது. இவ்வாறு பேராசிரியர் நளின் டி. சில்வா தலைமையிலான சிங்கள விடுதலை முன்னணி கோரிக்கை விடுத்துளது. இம் முன்னணி தேர்தல் நடைபெற இருக்கும் இச் சமயத்தில் பல்வேறு கட்சிகளுக்கும், விடுத்துள்ள ஒரு பொது வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்திய அரசின் நிர்ப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் ஆட்சி முறை நீக்கப்பட வேண்டும் எனவும், வடக்கு - கிழக்கில் மட்டுமன்றி நாட்டின் எப்பகுதியிலும் சிறுபான்மை இனருக்கான பாரம்பரிய தாயகம் இருப்பதாக ஏற்றுக்கொள்ளக் கூடாது எனவும், தற்போதுள்ள வடக்கு - கிழக்கு இணைப்பு ரத்துச்செய்யப்பட வேண்டுமெனவும், தேசிய இணக்கத்தை ஏற்படுத்துவதைக் கருத்தில் கொண்டு நாடு சம அளவுடைய 25 மாவட்டங்களாக மீள எல்லை நிர்ணயிக்கப்பட வேண்டுமெனவும் கூறப்பட்டு இருக்கிறது

### இலக்கிய

மேற்கொண்டதாகவும் மேற்படி உறுப்பினரின் பெயர் தற்போது தேசிய பட்டியலில் உட்படுத்தப்பட்டதாகவும் அவர் பத்திரிகையாளர் முன்னிலையில் ஒத்துக்கொண்டுள்ளார்.

### ஐ. தே. க.

ததாகவும் இவருடன் காயமடைந்த மேலும் ஆறுபேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமது கட்சியைச் சேர்ந்த ஆதரவாளர்கள் ஊர்வலமாக வரும் போது ஐ தே. கவைச் சேர்ந்த குண்டர்கள் இவர்கள் மீது மறைந்து இரு

### பொலிசார்

பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்கள் பல அரசியல் வாதிகளின் செல்வாக்குப் பெற்றவர்கள் என்றும் ஆனால் இவர்கள்மீது அரசியல் சார்பற்ற விசாரணை மேற்கொள்ளப்படும்

## தேர்தல் சட்டவிதிகளை மீறுவோர் கைதாவர்

பொதுத் தேர்தல்தொடர்பான சட்ட விதிகளை மீறுவோர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வா பணிப்பு விடுத்துள்ளதாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டி. ஈ. பனாகொட திவயின பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

கட்சி வேறுபாடுகளோ அன்றி பதவிகளையோ கருத்தில் கொள்ளக் கூடாது என்றும் சட்ட விதிகளை மீறுவோர் கைது செய்யப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் பணித்துள்ளார்.

## ஐ.தே க. சுவரொட்டிகளை பொலிசார் ஒட்டுகின்றனர்

(கொழும்பு)

சில பொலிஸ் அதிகாரிகள் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் சுவரொட்டிகளை ஒட்டுவதாகவும் எதிர்க்கட்சிகளின் சுவரொட்டிகளை பொதுமக்களைக்கொண்டு இவர்கள் அகற்றுவதாகவும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் குற்றம் சாட்டியுள்ளார்.

வெதாகம, பிபில போன்ற பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் இதனால் இவ் இரு பொறுப்பதிகாரிகளையும் உடனடியாக இடமாற்றம் செய்யுமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## ஒரு சிப்பாய் காயம்

வவுனியாவின் வடபகுதியில் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மோதலில் ஒரு ராணுவ சிப்பாய் காயமடைந்தார் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை செட்டிக்குளம் பகுதியில் சென்ற செவ்வாயன்று மோதல் நடைபெற்றதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## பவள விழா

அரியாலை சரஸ்வதிமத்திய நூல்நிலையம் - அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் ஆண்டு நிறைவு 'பவள விழா' வினை முன்னிட்டு இன்று இரவு 7-00 மணிக்கு மாதர் கலை நிகழ்ச்சிகள் நிலைய அமரர் விஸ்வநாதன் அரங்கில் தலைவரும் -பிரதம விருந்தினருமான திருமதி ர தாதேவி - பத்மநாதன் தலைமையில் இடம் பெறும் (24)


## வாக்களிப்பு விண்ணப்பம்

வடக்கு கிழக்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது புத்தளத்தில் தங்கியுள்ள வாக்காளர்கள், வாக்களிப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள், புத்தளம் மாவட்ட கிராம சேவையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### பாம்புக்கடி

உயிர்களைக் காப்பாற்றலாம் என இலங்கை பாம்புக்கடி வைத்திய நிபுணர்கள் கமிட்டியின் தலைவர் டாக்டர் டெனிஸ். ஜே. அலோசியஸ் கூறியுள்ளார்.

## மிருதங்க அரங்கேற்றம்



முகவரி - தம்பனை, மன்னார் வீதி, வவுனியா). 2ஆம் லெப் டினன்ட் பூபாலன் (ஜோகராசா சிவமூர்த்தி, விளாத்திக்குளம், இரணை இலுப்பைக்குளம், வவுனியா) ஆகிய இரு போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

ரணை மேற்கொள்ளப்படும் எனவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மேற்படி சம்பவங்களின்போது பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போது ஐவர் காயமடைந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவர்கள் மீது மறைந்து இருந்து தாக்குதல் நடத்தியதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### பல்கலைக்கழக

முன்னைய முடிவை மீண்டும் அமுல்படுத்த முன்வந்துள்ளது அதன்படி வாய்மொழிப் பரீட்சையும் நேர்முகப்பரீட்சையும் நடத்த முற்பட்டுள்ளது அதன்காரணமாகஇன்று பல்கலைக்கழக போதனை சாராஊழியர்கள் வேலைநிறுத்த போராட்டத்திலும் மறியலிலும் ஈடுபடப்போவதாக பல்கலைக்கழகஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

### 43 மணிநேரத்தில்

உண்மை என அந் நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த 48 மணித்தியாலங்களில் 93 தேர்தல் வன்முறைகள் நடைபெற்றுள்ளதாகவும் இதில் இருதரப்பிலும் நூறுக்கு மேற்பட்டவர்கள் கடுமையான காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சுமார் ஐம்பதிற்கு மேற்பட்ட வாகனங்கள் சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



பிறப்பு

13-12-1932

இறப்பு

12-6-1994

**அமரர் செல்வி சரோஜினிதேவி தில்லையம்பலம்**

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

அன்பின் திருவுருவாய்
பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்

கடமையின் இலக்கணமாய் இருந்து எங்களுக்கெல்லாம் வாழ வழிகாட்டிவிட்டுத் திடீரென எம்மை விட்டுப் பிரிந்த எங்கள் குலவிளக்கின்

ஈமக்கிரியைகளில் பங்குபற்றி உதவிகள் புரிந்தோருக்கும் இரங்கல் உரைகள், மலர்வளையங்கள், மாலைகள் வழங்கியோருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

15-07-94 வெள்ளிக்கிழமை நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன வைபவத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர்: நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

103, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(8812)

ஜோ. எகட்டனின

## ஜெசித்தாரா

**தரும் தோழமையுள்ள செய்தி**

உங்களுக்குத் தேவையான மேலைத்தேய, கீழைத்தேய, உணவு வகைகளை உங்கள் நாவின் ரசனைக்கேற்ப கட்டளையிட்டுப் பெற்றுக்கொள்ளலாம். விபரங்களை நேரில் அறியுங்கள்

ஜோ. எகட்டனின்
ஜெசித்தாரா,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை
சுண்டுக்குளி

(சி-9919)

நல்லூர் வணிகர் கழகம்

## முக்கிய அறிவித்தல்

அனைத்து வர்த்தகர்களுக்கும் ஊழியர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் ஒன்று 15-07-94 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இக் கலந்துரையாடலின் முக்கியத்துவத்தை உணர்ந்து எமது வர்த்தகர்கள், ஊழியர்கள் அனைவரும் தவறாது இக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வர்த்தக நிலைய உரிமையாளர்கள் பணிப்பாளர்கள் அனைவரும் இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ள வேண்டி இருப்பதால் வர்த்தக நிலையங்களை பூட்டிவிட்டு இதில் கலந்துகொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

செயலாளர்
சு. தனபாலசிங்கம்

(சி-9921)

யாழ். ஸ்ரீதரில்

தினசரி 4-00 மணி

**உயிராயுதம்**

தினசரி 6-00 மணி

சனி, ஞாயிறு 10-30
6.00 மணி

**JURASSIC PARK**

(சி-9786)



## செல்வன் இரா. பிரசாந்த்

(சங்கீதரத்தினம் திரு.எம். சிதம்பரநாதன் அவர்களின் மாணவன்)

காலம்:- 15.07.1994 வெள்ளி
மாலை 4-30மணி

இடம்:- இளம்கலைஞர் மண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

### இசை அரங்கு

பாட்டு:- சங்கீதபூஷணம் திரு. எஸ். பத்மலிங்கம்
உடன்பாடுபவர்:- திரு. ஆர். குகானந்தன்
வயலின்:- இசைஞானதிலகம்
திரு. ஆர். இராதாகிருஷ்ணன்
மிருதங்கம்:- செல்வன் இரா. பிரசாந்த்
கடம்:- கலாவித்தகா திரு. க. கண்ணதாசன்
முகர்சிங்:- வித்துவான் திரு. எஸ். ராஜா
தம்புரா:- வித்துவான் திரு. என். சண்முகலிங்கம்

அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. சே. இராஜேஸ்வரன்.
டாக்டர் திருமதி எஸ் இராஜேஸ்வரன்
பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

(8760)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.